# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

முறையீட்டு மனு எண் : 0349 /2017/ஊராட்சி

ஆணை எண் : 039 / 2017

நாள் : 23/03/2017

திரு. பி. எம். சுப்பையா,
3/85, முனியசாமி கோயில் தெரு,
ஈராச்சி Po. - 628 720.
எட்டையபுரம்.
தூத்துக்குடி மாவட்டம். – மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், – எதிர் மனுதாரர்
தூத்துக்குடி மாவட்டம்.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஈராச்சி ஊராட்சியில் வசிக்கும் திரு.பி.எம்.சுப்பையா தனது 14.03.2017 நாளிட்ட மனுவில் கசவன்குன்று கிராமத்தில் பங்களா தெருவில், 25 ஆண்டு காலம் மக்களின் பயன்பாட்டில் இருந்த வாறுகாலை, அரசு பொது சொத்துக்களை இடித்து அப்புறப்படுத்தும்போது மேல் அதிகாரிகளின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற அரசு விதியின்படி முன் அனுமதி பெறாமல் மூடப்பட்டதாகவும், பிரச்சனைக்குரிய தெருவில் புதிதாக சிமெண்ட் தளம் அமைக்க 22.05.2012ல் தீர்மானம் நிறைவேற்றப்படும்போது வாறுகால் மூடுவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்றும், சிமெண்ட் தளம் அமைக்கும் பணியில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்றும், வட்டார வளர்ச்சி அலுவலர் பஞ்சாயத்து

தலைவரை பாதுகாக்கும் முயற்சியிலேயே ஈடுபடுகிறார் என்றும், மக்கள் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவித்து, வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014 – ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7) ன்படி, "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் , "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை, எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால், எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி, அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

6/4/2017
செயலாளர்

6/4/17

பெறுநர்
திரு.பி.எம்.சுப்பையா,
3/85, முனியசாமி கோயில் தெரு,
ஈராச்சி Po-628 720.
எட்டையபுரம் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தூத்துக்குடி மாவட்டம்,
தூத்துக்குடி. (இணைப்புகளுடன்)

உ.திரி - 5